133—

துணை மின் நிலையம்

***13541 திரு. என்.டி. வெங்கடாச்சலம்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெருந்துறை தொகுதி, வாய்க்கால்மேட்டிலுள்ள கொங்கு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி வளாகம் அருகில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பெருந்துறை தொகுதியில், கொங்கு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு மின் தேவையின் அடிப்படையில் ஒரு புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தப் பகுதியில் இடத்தைக் கண்டறிந்து கொடுப்பாரேயானால், உடனடியாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.*

முற்பகல் 10-25

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *என்னை வாழவைத்த தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில் கொண்டிருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த தேர்தலைப் பற்றி சிந்திப்பதைக் காட்டிலும், அடுத்த தலைமுறையைப் பற்றி சிந்திக்க வேண்டுமென்கிற மாண்புமிகு அம்மா அவர்களுடைய தூய கொள்கையோடு, அடுத்த வருடம் முதல் மாதத்திலிருந்து

2018 ஜூன் 6]

தமிழ்நாடு முழுவதும் பிளாஸ்டிக் பொருள்களுக்குத் தடை விதிக்கப்படும் என்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி) தொலைநோக்குச் சிந்தனையை மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் சார்பாக அன்போடு வரவேற்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையிலே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே தடையில்லாத மின்சாரத்தைத் தந்திருக்கிறார்கள். வீடுதோறும் 100 யூனிட் மின்சாரம் இலவசமாக வழங்கப்படும் என்கிற கொள்கைக்கேற்ப, ஈரோடு மாவட்டத்தில் மட்டும் 6 இலட்சத்து 91 ஆயிரம் வீடுகளுக்கு தடையில்லாமல் இலவச மின்சாரத்தைத் தந்துள்ளார்கள். தடையில்லாத மின்சாரத்தைத் தந்தாலும்கூட, தங்குதடையில்லாமல் அந்தந்தப் பகுதிகளுக்கு மின்சாரத்தைத் தர வேண்டும் என்கிற தொலைநோக்குச் சிந்தனையோடு ஈரோடு மாவட்டத்தில் மட்டும் கடந்த ஆண்டுகளில் 7 துணை மின் நிலையங்களை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய நல்லாசியோடு மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே பெருந்துறையிலே இருக்கிற கொங்கு பொறியியல் கல்லூரி அருகில் குடியிருப்புகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலும், பல்வேறு அரசுக் கல்லூரிகள் அந்தப் பகுதியிலே புதியதாக உருவாகியிருக்கின்ற காரணத்தினாலும், தடையில்லாத மின்சாரத்தைத் தர வேண்டுமென்கிற நோக்கத்தோடு, அங்கே ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்கிற கோரிக்கையை நான் வைத்திருந்தேன். இடம் தேர்வு செய்வதிலே பல்வேறு இடர்பாடுகள் இருக்கின்றன. அருகில் இருக்கிற ஒரு தனியார் பொறியியல் கல்லூரி, துணை மின் நிலையம் அமைப்பதற்கு ஓர் ஏக்கர் நிலம் தருவதாக ஏற்கெனவே சொல்லியிருந்தார்கள். ஆனால், தற்போது அதைத் தர மறுத்து விட்டார்கள். அந்தப் பகுதியிலே நிலத்தினுடைய மதிப்பு மிகவும் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே, எப்படியாவது அந்தக் கல்லூரியோடு பேசி, அந்த நிலத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெற்றுத் தந்து, அந்த இடத்தில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு ஆவன செய்வாரா என்று தங்கள் மூலமாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்தக் கல்லூரியில் இடம் கொடுப்பதாகச் சொல்லி, மறுத்துவிட்டார்கள் என்று சொல்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்குண்டான தொகையை மின்சார வாரியம் வழங்கும் என்று அவர்களிடத்திலே தெரிவிக்க வேண்டும். நாம் ஏதோ தானமாகக் கேட்கிறோம் என்று நினைத்து அவர்கள் கொடுக்க மறுத்துவிட்டார்களா என்று தெரியவில்லை. ஆகையால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒருமுறை பேசிப் பார்க்கட்டும், நானும் அவர்களோடு பேசுகிறேன். அப்படி இடம் கொடுக்கும்பட்சத்தில் உடனடியாக துணை மின் நிலையம் அங்கே அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இல்லையென்றாலும்கூட, அருகில் ஏதாவது அரசு புறம்போக்கு நிலமோ, வேறு இடமோ அல்லது தனியார் யாராவது நிலம் கொடுப்பதாக இருந்தால்கூட, அதை மின்சார வாரியம் விலைக்கு வாங்கி, உடனடியாக அங்கே துணை மின் நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்குண்டான முயற்சிகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்துறை பகுதியைப் பொறுத்தவரையிலே, மின்சார வாரிய அலுவலகம் 5 இடங்களில் செயல்பட்டு வருகின்றது. அந்த 5 அலுவலகங்களும் வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. இதற்கு மாதமொன்றுக்கு சுமார் 1 இலட்சம் ரூபாய் அளவிற்கு வாடகை கொடுக்க வேண்டிய ஒரு சூழ்நிலை மின்சார வாரியத்திற்கு இருக்கிறது. அரசு நிலங்கள் நிறைய இருக்கின்றன. துணை மின் நிலையம் அமைப்பதற்கு, பெருந்துறை மருத்துவக் கல்லூரி அருகில் இப்பொழுது இரண்டு ஏக்கர் நிலம் எடுத்திருக்கிறார்கள். ஆனால், அங்கு துணை மின் நிலையம் அமைப்பதற்கு இரண்டு ஏக்கர் நிலம் தேவைப்படாது. ஆகவே, அதிலிருக்கிற ஒரு ஏக்கர் நிலத்தைப் பெற்று, அந்த இடத்திலே மின்சார வாரியத்திற்குச் சொந்தக் கட்டடத்தைக் கட்டினால் மாதந்தோறும் வாடகை கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்காது; மின்சார வாரியத்திற்கு அது இலாபமாக இருக்கும். அதுமட்டுமல்லாமல், ஈரோடு மாவட்டத்திற்கும், பெருந்துறை

2018 ஜூன் 6]

தொகுதிக்கும் பரீட்சார்த்தமாக underground cable அமைக்கக்கூடிய ஒரு திட்டம் செயல்படுத்தப்படும் என்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டம் இப்பொழுது எந்த நிலையிலே இருக்கிறது என்பதைப் பற்றியும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கு அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் இருக்கின்றன. பெருந்துறை மருத்துவக் கல்லூரியில் 2 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அதிலே ஓர் ஏக்கர் நிலத்தில் கட்டடங்கள் கட்ட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அங்கே இருக்கின்ற மருத்துவக் கல்லூரியில் ஒரு துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்டார்கள். அதனால், அந்த மருத்துவக் கல்லூரியில் இடம் கொடுத்திருக்கின்றார்கள். அதுவும் 33/11 KV-க்கு மட்டும்தான் இரண்டு ஏக்கர் நிலம் கொடுத்திருக்கின்றார்கள். ஆக, இன்னும் கொஞ்சம் அதிகமாக நிலம் கொடுப்பார்களென்று சொன்னால், நிதிநிலைக்கேற்ப உடனடியாக அலுவலகங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இரண்டாவதாக, underground cable அமைப்பதுபற்றிக் கேட்டிருக்கிறார்கள். ஈரோடு நகரத்தைப் பொறுத்தவரையில், புதைவட கேபிள் அமைப்பதற்கு டெண்டர் கோரப்பட்டிருக்கிறது. டெண்டர் முடிவுற்றவுடன் அந்தப் பணிகள் ஆரம்பிக்கப்படும். அதேபோல, பெருந்துறை பகுதியில் பரீட்சார்த்தமாக ஈரோடு ரோடு, பவானி ரோடு, கோயம்புத்தூர் ரோடு ஆகிய மூன்று பகுதிகளிலும் உயர் மின்னழுத்தம் மற்றும் தாழ்வழுத்த மின் கம்பிகளை புதைவடத் தடமாக அமைப்பதற்குண்டான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கூடிய விரைவில் டெண்டர் கோரப்பட்டு, அதற்கும் பணிகள் நடைபெறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள்.*

திரு. வாகை சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேளச்சேரி தொகுதியிலே அடையாறு, திருவான்மியூர், தரமணி, அம்பேத்கர் நகர், டான்சி நகர் மற்றும் இன்னும் பல பகுதிகளிலே,* overhead cable-*ஐ* underground cable *ஆக மாற்றும் பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால், பணிகள் முடிவுபெறாமல் பாதியிலே இருக்கின்றன.* underground-*ல்* cable *பதித்த பிறகும் பயனற்று இருக்கும் மின் கம்பங்கள், அதிலும் இரும்பு மின் கம்பங்கள் அகற்றப்படாமல் சாலைகளிலே இருப்பதனால், விபத்துகள் ஏற்படுகின்றன. இன்னும் சில நாட்களிலே மழைக்காலம் வர இருப்பதால் வேளச்சேரியில் பாதிப்புகள் ஏற்படாமல் இருப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், புதைவடம் பதிக்கும் பணிகளில் வேகம் குறைவாக இருக்கின்றது, பணிகளை வேகப்படுத்த வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். உடனடியாக அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு அந்தப் பணிகளை முடிப்பதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொள்வோம். மேலும், புதைவடம் பதிக்கப்பட்ட இடங்களில் உள்ள மின் கம்பங்களை அகற்ற வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். அதை ஆய்வு செய்து உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன் அவர்கள்.*

திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி, அரியலூர் ஊராட்சியில் 110/22 KV துணை மின் நிலையம் அமைக்கப்படுமென கடந்த ஆண்டு நடைபெற்ற கூட்டத் தொடரில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். ஆனால், அந்தப்*

பணிகள் இன்றுவரை தொடங்கப்படவில்லை. இந்து சமய அறநிலையத் துறையிலிருந்து கிடைக்க வேண்டிய NOC கிடைக்கப்படாமல், அந்தக் கோப்புகள் அனைத்தும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் கிடப்பில் உள்ளன. இதனைத் துரிதப்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஒவ்வொரு முறையும் சொல்லி வருகின்றேன். அரசு துறையாக இருந்தாலும் சரி, தனியாராக இருந்தாலும் சரி, இடம்தான் பிரச்சினையாக இருக்கின்றது. ஒவ்வொரு பகுதியிலும் இருக்கின்ற மின்னழுத்தத்தைக் குறைக்க வேண்டும், 400 கே.வி. ஆக வருகின்றது. 110 KV-ஐ 33 KV ஆக மாற்றிக் கொடுக்கின்றபோதுதான் சீரான மின்சாரம் கிடைக்கும். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, தேவையான துணை மின் நிலையங்களை அமைக்க உத்தேசிக்கப்பட்டு, இந்த ஆண்டு மட்டும் 132 துணை மின் நிலையங்களை அமைப்பதற்கு நிதியை ஒதுக்கியிருக்கின்றோம். ஆனால், இடம் கிடைப்பது மிகவும் அரிதாக இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன இடம், இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்தில் என்ன பிரச்சினை என்றால், அவர்கள் 200 சதவிகித மனை விலையைக் கேட்கின்றார்கள். அதனால் அதை வாங்குவது சிரமமாக இருக்கின்றது; அந்தக் கஷ்டம் இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆய்வு செய்து ஏதாவது இடம் இருக்குமென்று சொன்னால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். அதுபோக, 765 KV துணை மின் நிலையம் முதன்முதலாக உங்கள் பகுதியிலேதான் வர இருக்கின்றது. அது வருகின்றபோது அந்தப் பகுதியிலே இடமிருந்தால்கூட நாங்கள் அங்கே 110 கே.வி. துணை மின் நிலையமும் அமைப்பதற்குண்டான நடவடிக்கையை மேற்கொள்கிறோம். இருந்தாலும்கூட, அங்கிருக்கிற அதிகாரிகளை நாங்கள் உங்களோடு கலந்து பேசச் சொல்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த அதிகாரிகளிடத்தில் வேறு இடமிருப்பது குறித்துச் சொன்னால், நாங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.